இருக்கிறது. நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலே குறுகிய இடமாக இருக்கிற இடங்களில் கூட பஸ் ஸ்டாப் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், மௌன்ட் ரோட் போன்ற இடங்களில் மாடி பஸ்களில் இருந்து கீழே இறங்கவும், ஏறவும் அவ்வளவு சாத்தியக் கூறாக இல்லை என்ற காரணத்தினால்தான் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகளைக் கூட இன்றைக்கு அரசு நிறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனத்திலே கொண்டு சென்னை மாநகருக்கு வருகின்ற ஜூன் மாதத்திற்குள் 200 பேருந்துகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் கூடுதலாக இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணையை இந்தத் துறை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *425*, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. திரு. அப்பு நடேசன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

425 —

முஞ்சிறை - சென்னைக்குப் பேருந்து இயக்குதல்

** 38301—திரு. மா. சுந்தரதாஸ் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தொகுதி, முஞ்சிறையிலிருந்து - சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாடு என்று சொன்ன சமயம் கூட அந்த வண்டி முஞ்சிறையிலிருந்து சென்று கொண்டிருந்தது. அந்தத் தட்டுப்பாடு முடிந்ததற்குப் பிறகு, அதற்கு அப்புறம் அந்த வண்டி நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் கருணை கொண்டு முஞ்சிறையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் விட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்ட காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நம்முடைய காலத்திலே அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முஞ்சிறையிலிருந்து மார்த்தாண்டம் வழியாக பேருந்துகளை - மார்த்தாண்டம் முஞ்சிறையிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. முஞ்சிறையிலிருந்து சென்னைக்கு பேருந்துகளை இயக்குகின்ற பொழுது அதிலே பயணம் செய்தவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினாலே தான் அது நிறுத்தப்பட்டது. ஆகவே மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு மனத்திலே கொண்டு இயக்க சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 426, திரு. இரா. தங்கராசு, இருக்கையில் இல்லை.

வினா எண் 427, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

427—

இராஜபாளையத்தில் புறச்சாலை அமைத்தல்

*** 35393 திரு. தி. சாத்தையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் நகருக்கு புறச்சாலை அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?